# பெறுகை அறிவித்தல் (IFB)
# உள்ளூராட்சித் திணைக்களம், வடக்கு மாகாணம்.
## சாவகச்சேரி நகராட்சி மன்றம், சாவகச்சேரி.
## பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டம்

1. பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவீனங்களுக்காக உலக வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசுக்கு ஒரு கடனுதவி கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அதன் ஒரு பகுதியினை கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைத்திட்ட கொடுப்பனவிற்கு பிரயோகிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.

| தொ. இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை மில்லியனில் | வேண்டப்படும் தரம் | ஒப்பந்த காலம் (நாட்கள்) | கேள்விப் பிணை வைப்பு | கேள்வி செல்லுபடியாகும் காலம் | கேள்விப் பிணை வைப்பு செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/JAF/CUC/BT4/2024/01 | சாவகச்சேரி நகரத்தில் கடைகள் அமைத்தல் வேலைத்திட்டம், கட்டம் - II | 12.47 | C6 அல்லது மேல் தரம் கட்டடங்கள் | 90 | 125,000.00 | 07-05-2024 | 04-06-2024 |

3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

4. ஒப்பந்தம் கையளிக்கப்பட தகுதி பெறுவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் எந்தவொரு நிறுவனங்களினாலும் கறுப்புப் பட்டியல் படுத்தப்படாதிருக்க வேண்டியதுடன் உள்ளூர் ஒப்பந்தகாரர்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) இல் கட்டடங்கள் நிர்மாணிப்புத் துறையில் பதிவினை கொண்டிருக்கவும் வேண்டும்.

5. தேவையான தகைமைகள், **கேள்வி ஆவணம் பகுதி 4** இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) **கேள்வி ஆவணம் பகுதி 5**இல் காட்டப்பட்டுள்ளது.

6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி தொலைபேசி – 021 227 0806, தொலைநகல் - 021 227 0079 மின்னஞ்சல்: chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 2024.01.22 ஆம் திகதியிலிருந்து 2024.02.19 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணமொன்றை **செயலாளர், சாவகச்சேரி நகராட்சி மன்றம், சாவகச்சேரி** இடமிருந்து வேலை நாட்களில் 2024.01.22 ஆம் திகதியிலிருந்து 2024.02.19 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணிக்கும் பி.ப 3.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.4000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

8. கேள்விகளை இரு பிரதிகளில் தயாரித்து கோரப்படும் ஆவணங்களுடன் தனித்தனியாக இரு உறைகளில் இட்டு **தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழு, பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டம் (பி.அ.உ.தி) , சாவகச்சேரி நகராட்சி மன்றம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 2024.02.20 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

9. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கமைவாக கேள்விப் பிணைமுறியானது கேள்வி ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும்.

10. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 2024.02.12 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர்,
உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு,
பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டம்(பி.அ.உ.தி),
சாவகச்சேரி நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
2024.01.22